இறக்கின்றவர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்க அமைச்சர் அவர்கள் முன்னுதாரணத்தை ஏற்படுத்துவாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிவாரணத் தொகையைக் கொடுத்து அரசுக்குக் கூடுதலான செலவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இந்த நோய் அல்லது இந்த நிலைமைகள் வருவதற்கு முன்பே அதைக் கண்டறிந்து தக்க முறையிலே தடுப்பு நடவடிக்கை எடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினையே இருக்காது. அதற்காக சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உஷார்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பிரசவம் பார்ப்பதற்கு பெண் டாக்டர்கள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை தங்கம், இது காலரா பிரச்சினை. வினா எண் 55, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

55—

மீன் சந்தை

***1062—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி மீன் சந்தையை நகரின் மையப் பகுதியில் உள்ளதை, ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) மீன் சந்தைக் கழிவுகளைக் கழிவுநீர்ப் பண்ணையில் கொட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர் நகராட்சி மீன் சந்தையை, மையப் பகுதியில் உள்ளதை, ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) தற்சமயம் இயங்கிவரும் மீன் மார்க்கெட்டில் சேர்க்கப்படும் கழிவுகளை அகற்றி கழிவுநீர்ப் பண்ணைக்குக் கொண்டு செல்லும் பணி Exnora என்ற அமைப்பு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பொன்மொழியைப் போன்று கருவாடு மீனாகாது. மீனாகிவிட்டாலாவது நாற்றம் இல்லாமல் இருக்கும். இப்போது ஓரளவிற்கு எங்களுடைய வேலூர் பகுதிக்கு வரக்கூடிய மீன்கள் எல்லாம் செத்துப்போன மீன்கள்தான்; உயிரோடு இருக்கும் மீன்கள் விற்கப்படவில்லை, அந்த மீன் மார்க்கெட்டில். ஆகவே, இறந்துபோன மீன்கள் Ice-ல் வருகின்றபோது அது கொஞ்ச நேரம் ஆன.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், மீனைக் கொன்றால்தான் சாப்பிட முடியும். உயிரோடு சாப்பிட முடியாது.

திரு. சி. ஞானசேகரன்: நகரத்தினுடைய மையப் பகுதியிலே எங்களுடைய வேலூரில் அந்த மீன் மார்க்கெட் பல ஆண்டு காலமாக இயங்கிக் கொண்டிருப்பதற்கு பொதுமக்கள் மிகவும் அதிகமாக எதிர்ப்புகளைத் தெரிவித்து பல போராட்டங்களை நடத்தினார்கள். அதுபோல, நீதிமன்றத்திலே வழக்குகள் எல்லாம்கூடத் தொடுக்கப்பட்டன. ஆகவே, அதை ஒரு முறை மாற்றுவதற்கான ஆணைகூடப் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும்கூட, இந்த மீன் மார்க்கெட்டை மாற்றாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நகரப் பகுதியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதியில், வேலூரில் மெயின் ரோட்டிலே, ஆபிசர்ஸ் லைன் என்கிற மெயின் ரோட்டில் அந்த மீன் மார்க்கெட் அமைந்திருக்கிறது. ஆகவே, அங்கேயிருந்து அந்த மீன் மார்க்கெட் மாற்றப்படுமேயானால் நிச்சயமாக அது பொதுமக்களுக்கு ஏற்புடைய ஒன்றாக இருக்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் இதைப் பரிசீலனை செய்து அந்த மீன் மார்க்கெட்டை வேறு பகுதிக்கு மாற்றுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போல அடுத்த கேள்விக்கு ஒரு பதில் சொன்னார்கள். Exnora அமைப்பு மூலம் அந்தக் கழிவுகளை எல்லாம் கொண்டுபோய் கழிவுநீர்ப் பண்ணையில் போடுவதாகச் சொன்னார்கள். முழுக்க முழுக்க அமைச்சருக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. Exnora அமைப்பு என்பது வேலூரின் மையப் பகுதியிலே லாரிகளை எல்லாம்

2001 செப்டம்பர் 7]

ரிப்பேர் செய்கிற ஓரிடத்தில் நகராட்சியே ஒரு கொட்டகை அமைத்துத் தந்து அங்கே கொண்டுபோய்த்தான் அதை எருவாக மாற்றுகிறோம் என்று சொல்லி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கழிவுநீர்ப் பண்ணைக்கு அது கொண்டு செல்லப்படவில்லை. ஆகவே, கழிவுநீர்ப் பண்ணைக்கு அதை எடுத்துச் சென்று ஊருக்கு வெளியே கொண்டுபோய் அதைத் தள்ளுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமாக, வேலூர் நகரின் அருகிலேயே வேறு இடம் இல்லாத காரணத்தினால் அந்தக் கழிவுகளை அகற்றுவதற்கு, அதே இடத்தில் ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டு நகராட்சி கடன் பெற்று அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இணைந்துதான் Exnora அமைப்பு மூலம் கழிவுகளை அகற்றி கழிவுநீர்ப் பண்ணைக்குக் கொண்டு செல்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கேள்வியைப் போட்ட பிறகுதான் ஒரு கூட்டம் போட்டு அந்த Proposal, முன்மொழிவு என்ற அளவிலேதான், 85 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்சாதன வசதியை அங்கே அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகராட்சிக்குச் சொந்தமான 45 ஏக்கர் இடம் மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு ரூ. 2 இலட்சம்தான் ஆண்டுக்கு அதிலே வருமானம் வருகிறது. 45 ஏக்கர் நிலத்தைக் கொண்டுபோய் குத்தகைதாரர்களுக்குக் கொடுத்துவிட்டு, 2 இலட்சம் ரூபாய் வருவாயாகப் பெற்றுக் கொண்டிருக்கின்ற நகராட்சி, ஏனோ அந்த இடத்தை விட்டுவிட்டு குப்பையைக் கொட்டுவதற்கு இடமே இல்லையென்று சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்திக்கொண்டு வந்துகொண்டிருக்கிறது. இப்போது குப்பை கொட்டக்கூடிய இடத்தில், சதுப்பேரி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், இங்கே லாரியிலே கொண்டு வந்து குப்பை கொட்டக் கூடாது என்றுகூறி சாலை மறியல் எல்லாம் செய்து, அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், அமைச்சர் பரிசீலிக்கலாம் என்று சொல்லிவிட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்துவிடுகிறேன். ஆகவே, அந்தக் குத்தகைதாரர்களின் குத்தகையை cancel செய்துவிட்டு, மீண்டும் நகராட்சியே எடுத்து, அந்த இடத்தில் கொண்டுபோய் குப்பைகளை எல்லாம் கொட்டுவதற்கு நகராட்சி ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையைச் செயல்படுத்துவதற்கும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதி என்ற ஒரு முறையை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது என்ன முறை என்பதைத் தயவுசெய்து விளக்குவாரா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதன இருப்பறையுடன் மீன் மார்க்கெட் என்று சொல்கிறார்கள். அதாவது கழிவுகளையெல்லாம் அந்த அறையிலேயே வைப்பது. கழிவுகளை எல்லாம் வெளியே துர்நாற்றம் ஏற்படாத அளவிற்கு அங்கே வைக்க வசதி செய்வதைத்தான் குளிர்பதன இருப்பறை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

56–

ஊரகத் தொழில்கள்

***174–திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–